4. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(உ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

5. 1967-68-ம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் (தொடர்ச்சி).

*** திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட நிதி நிலை அறிக்கையின் மேல் எனக்கும் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். கடந்த இருபது ஆண்டுகளாகத் தயாரிக்கப்பட்ட திட்டம் போல் இல்லாமல், இந்த வரவு செலவுத் திட்டம் ஏழை எளிய மக்களுக்கும் நடுத்தர வர்க்கத்தினருக்கும் மகிழ்ச்சியை ஊட்டுகின்ற திட்டமாக அமைந்திருக்கிறதென்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு முக்கியமாக நான்கு காரணங்கள் இருக்கின்றன. முதற் காரணம் இந்த வரவு செலவுத் திட்டம்தான் அடிமட்டத்தில் இருப்பவர்களுக்கு நன்மை செய்வதாக இருக்கிறது. இரண்டாவது காரணம், வரி விதிப்பசிலே பொருத்தமான, புரட்சிகரமான அளவில் யார் யார் தாங்கிக்கொள்ள முடியுமோ அவர்கள் பேரி லேயும், யார் யார் தாங்கிக்கொள்ள முடியாதோ அவர்களை நீக்கியும் இருக்கும்படியான நிலைமையை இந்த வரவு செலவுத் திட்டத்திலே தான் பார்க்க முடிகிறது. மூன்றாவது காரணம், இந்த வரவு செலவு அறிக்கையில் சமுதாய சமத்துவத்தைப்பற்றி குறிப்பான அம்சங்கள் இருக்கின்றன. நான்காவதாக, இதுவரைக்கும் இந்த மாநில அரசு மத்திய அரசின் எதேச்சாதிகாரப் போக்கைத் தட்டிக் கேட்காமல் இருந்ததைச் சுட்டிக்காட்டி, மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் உள்ள உறவு முறைகள் என்னென்ன என்பதை முதன்முதலாக தமிழக அரசுதான் எடுத்துக்காட்டி மற்ற மாநிலங் களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கிறது. உதாரணமாக, நேற்றையதினம் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரஸ் பிரமுகர் ஒருவர், "தமிழகத்தை வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ளுங்கள். ஆந்திராவில் தொழிற்சாலை அமையவில்லையானால், துணிச்சலாக அறிஞர் அண்ணா வழியில் சென்று, பதவித் துறப்பு போன்ற